TNMD070066642026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுரை**

**முன்னிலை : திரு.கி.ஹரிஹரசுதன் B.A.,B.L.,(Hons) L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.2, மதுரை**

**2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை**

**Cr.M.P.No.2651/2026**

**C.N.R.No.TNMD070066642026**

*****

1) சூர்யபிரகாஷ் த.பெ.செந்தில்குமார்

2) கண்ணன் த.பெ.ராதாகிருஷ்ணன்

3) கணபதி த.பெ.கண்ணன் ...மனுதாரர்கள்/எதிரிகள்

**/எதிர்/**

காவல் சார்பு ஆய்வாளர்

மதிச்சியம் சட்டம் மற்றும் ஒழுங்கு காவல்நிலையம்

குற்ற எண்.106/2026

சட்டப்பிரிவுகள் 191(1), 191(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS

...எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இந்நீதிமன்றத்தில் இன்று இம்மனு மீது வழக்கு விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சூர்யராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு தரப்பில் தாக்கல் செய்த பதில் உரையில் கருத்தில் கொள்ளப்பட்டு இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்றே இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

மனு பிரிவு 480 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி மீது சட்டப்பிரிவு 191(1), 191(2), 296(b), 115(2), 118(1), 351(3) BNS–ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

1) மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர்/ எதிரிக்கும் இக்குற்ற வழக்கிற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்/எதிரியை பிணையில் விட்டால் நீதிமன்றம் விதிக்கும்

எந்த ஒரு நிபந்தனையும் பின்பற்ற தயாராக இருப்பதாகவும், இந்த பிணை மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டுள்ளார்.

2) மனு குறித்து அரசு உதவி வழக்கறிஞருக்கும், எதிர் மனுதாரர் காவல் நிலையத்தாருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் எதிரிக்கு பிணை வழங்கும் பட்சத்தில் சாட்சிகளையும், தடயங்களையும் கலைக்ககூடும் என்பதாலும், வழக்கின் புலன்விசாரணைக்கு குந்தகம் விளைவிப்பார்கள் என்பதாலும் எதிரிக்கு பிணை வழங்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4) இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. எதிரியை பிணையில் விடக்கோரி மனு தாக்கல் செய்துள்ள நிலையில், அரசு தரப்பிலிருந்து கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இவ்வழக்கின் எதிரி கடந்த 30.03.2026-ம் தேதியன்று கைது செய்யப்பட்டு கடந்த 29 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் புலன்விசாரணை பெருமளவு முடிந்துவிட்ட காரணத்தினாலும், இவ்வழக்கில் காயம்பட்ட நபர் மருத்துவமனை சிகிச்சையில் இருந்து திரும்பி விட்டதாலும், மனுதாரர்/எதிரியை போலிஸ் காவலில் எடுத்து விசாரிப்பதற்கு தற்போது வரை குற்றமுறையீட்டாளர் தரப்பில் எந்த மனுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், மனுதாரர்/எதிரி காவல்துறையினர் விசாரணைக்கு தேவையில்லை என்பதாலும், மனுதாரர்/எதிரிக்கு நிரந்தர முகவரி உள்ளதால் அவர் வழக்கு விசாரணையின் போது தலைமறைவாகமாட்டார் என்று மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எடுத்துரைத்துள்ளதாலும், தகுந்த ஜாமீன்தாரர்களை முன் நிறுத்த மனுதாரர்/எதிரி தயாராக உள்ளதை கருத்தில் கொண்டும், மனுதாரர்/எதிரிக்கு நிபந்தனையுடன் கூடிய ஜாமீன் வழங்குவது தான் நீதியின் பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவானது பின்வரும் நிபந்தனைகளின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

TNMD070066642026

**<u>நிபந்தனைகள்</u>** :–

1. எதிரிகள் தனக்காக இரண்டு ஜாமீன்தார்களோடு தலா ரூ.10,000/–க்கு பிணைமுறி அளிக்க வேண்டும் என்றும், ஒரு ஜாமீன்தாரர் நெருங்கிய உறவாக இருக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

2. எதிரி தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் ஆஜராகி தொடர்ந்து 30 நாட்கள் வரை கையெழுத்திட வேண்டுமென்றும், இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

3. எதிரி இவ்வழக்கின் விசாரணைக்கும் விசாரணை அதிகாரிக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் சாட்சிகளை கலைக்க முற்படக்கூடாது என்றும், வழக்கு வாய்தா நாட்களில் தவறாமல் ஆஜராக வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 27.04.2026ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN Digitally signed by HARIHARASUDHAN
Date: 2026.04.27 18:13:29 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,

மதுரை.